**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**
**முன்னிலை: திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி பி.எஸ்.சி., எல்.எல்.பி.,**
**நீதித்துறை நடுவர், அறந்தாங்கி.**
**2026 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை**

**CC No.189/2017**

| | | |
|---|---|---|
| 1. | **குற்றமுறையீட்டாளர்** | : அரசுக்காக: காவல் ஆய்வாளர்,<br>அறந்தாங்கி காவல் நிலையம்,<br>அறந்தாங்கி.<br>குற்ற எண்.185/2017. |
| 2. | **குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர் மற்றும் விலாசம்** | : A1. விவேக்<br>த/பெ. குடியரசு.<br>A2. செந்தில் குமார்,<br>த/பெ.நாகலிங்கம்.<br>A3. குடியரசு,<br>த/பெ.நாகலிங்கம்.<br>A4 பாலமுருகன்,<br>த/பெ.நாகலிங்கம்.<br>**எதிரிகளின் முகவரி:**<br>வடகாடு,<br>மேல்பட்டு,<br>அறந்தாங்கி தாலுகா,<br>புதுக்கோட்டை மாவட்டம். |
| 3. | **குற்றம் நடந்த நாள்** | : 06.04.2017 |
| 4. | **புகார் அளிக்கப்பட்ட நாள்** | : 10.04.2017 |
| 5. | **முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்** | : 10.04.2017 |
| 6. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட நாள்** | கைது செய்யப்படவில்லை |
| 7. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பிணையில் வந்த நாள்** | கைது செய்யப்படவில்லை |
| 8. | **குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்** | 29.10.2017 |
| 9. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு** | A2- இ.த.ச.பிரிவுகள் 294(b), 325 of IPC |

| | | |
|---|---|---|
| | **எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு** | A1, A3, A4 – இ.த.ச.பிரிவுகள் 325 of IPC |
| **10.** | **குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பதில்** | : குற்றவாளிகள் இல்லை |
| **11.** | **வழக்கு விசாரணை தொடங்கப்பட்ட நாள் மற்றும் முடிக்கப்பட்ட நாள்** | : 24.01.2019–11.09.2024 |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| PW1 | – 24.01.2019 | 08.03.2024 |
| PW2 | – 24.01.2019 | 22.02.2024 |
| PW3 | – 24.01.2019 | 22.02.2024 |
| PW4 | – 10.03.2021 | 10.03.2021 |
| PW5 | – 10.03.2021 | 10.03.2021 |
| PW6 | – 15.10.2022 | 15.10.2022 |
| PW7 | – 15.10.2022 | 15.10.2022 |
| AW1 | – 11.09.2024 | 11.09.2024 |

| | | |
|---|---|---|
| **12.** | **நீதிமன்றத்தின் முடிவு** | : 2 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 325 of IPC–ன் கீழும், 1, 3, 4 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 325 of IPC–ன் கீழுமான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் சரிவர நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| **13.** | **வழக்கு சொத்து** | : வழக்கு சொத்து ஏதும் இல்லை. |

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராஜசேகர், M.A., B.L., மற்றும் இரா.ஜான்சி மகாராணி, B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்....

## தீர்ப்புரை

அரசு தரப்பில் 2 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 325 of IPC–ன் கீழும், 1, 3, 4 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 325 of IPC–ன் கீழும் குற்றஞ்சாட்டப்பட்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***இனிமுதற்கொண்டு இந்திய தண்டனைச்சட்டம் என்பது இ.த.ச. என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் என்பது கு.வி.மு.ச. என்றும் அழைக்கப்படும்.***

### 1) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதியறிக்கையின் சுருக்கம்:

1.1) இவ்வழக்கின் வாதியின் மாமியாருக்கும், அவரது அம்மா மாரியம்மாளுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்துள்ளது. இந்நிலையில் வாதியின் மனைவி கௌசல்யா அவரது அம்மா வீட்டில் இருந்தவரை பார்ப்பதற்காக, வாதி 06.04.2017–ம் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் வடகாட்டில் உள்ள தனது மாமியார் வீட்டிற்கு வந்திருந்துள்ளார். அச்சமயம் எதிரிகள் நான்கு பேரும் அங்கு வந்துள்ளனர். எதிரி செந்தில்குமார் வாதியைப் பார்த்து, "டேய் தேவடியா மகனே, வக்கால ஒலி எங்கடா இங்கு வந்தே" என்று அசிங்கமாக பேசி, வாதியை பலது கையால் மூக்கில் குத்தியுள்ளார். மற்ற மூன்று எதிரிகளும் கம்பால் வாதியை அடித்துள்ளார்கள். எதிரிகள் அடித்ததில் வாதிக்கு மூக்கு, இடது தோள்பட்டை, இரண்டு கால்கள் மற்றும் இடது காது ஆகிய இடங்களில் அடிப்பட்டு, கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது. 2 வது எதிரியின் செய்கையானது இ.த.ச.பிரிவுகள் 294(b), 325 of IPC–ன் கீழும், 1, 3, 4 எதிரிகளின் செய்கையானது இ.த.ச.பிரிவுகள் 325 of IPC–ன் கீழுமான தண்டிக்கதக்க குற்றம் என அறந்தாங்கி காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

### 2) வழக்கினை கோப்பிற்கு எடுத்தல், அழைப்பாணை, நகல் வழங்குதல் :

இந்நீதிமன்றத்தால் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கை மற்றும் வாக்குமூலங்கள், ஆவணங்கள் போன்றவைகளை கவனமாக பரிசீலனை செய்ததில், எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு உள்ளதென இந்நீதிமன்றம்

கருதியதால், வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு **கு.வி.மு.ச. பிரிவு 204** இன் கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

அழைப்பாணையின் பேரில் எதிரிகள் ஆஜரானதும், **கு.வி.மு.ச. பிரிவு 207** இன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டது.

<u>3) குற்றச்சாட்டு வனைதல் மற்றும் எதிரிகளின் பதில் :</u>

பின்பு எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் 2 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 325 of IPC–ன் கீழும், 1, 3, 4 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 325 of IPC–ன் கீழும் குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரம் உள்ளதென கருதியதால், எதிரிகள் மீது **கு.வி.மு.ச. பிரிவு 240(1)** இன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து **கு.வி.மு.ச. பிரிவு 240(2)** இன் கீழ் எதிரிகளிடம் தமிழில் விளக்கி கூறி வினவிய போது, எதிரிகள் பொய் வழக்கு என்று மறுத்துரைத்து வழக்கு விசாரணைக்கு வேண்டுரைத்தனர். எனவே இந்நீதிமன்றமானது **கு.வி.மு.ச. பிரிவு 242(1)** இன் கீழ் அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிட்டது.

<u>4) அரசு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :</u>

**4.1)** அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.7** வரையிலான சாட்சியங்களும், **அ.சா.ஆ.1 முதல் 9** வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4.2)** அரசு தரப்பில் **அ.சா.1** ஆக சுரேஷ் என்பவர் விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டும், **அ.சா.2** ஆக கௌசல்யா என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.3** ஆக தமிழரசி என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.4** ஆக நாராயணன் என்பவர் விசாரணை செய்யப்பட்டு, அவர்மூலம் பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டும், **அ.சா.5** ஆக ராமசாமி என்பவர் விசாரணை செய்யப்பட்டும், **அ.சா.6** ஆக வேலுச்சாமி என்பவர் விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டும், பார்வைமகஜரானது **அ.சா.ஆ.4** ஆகவும், மாதிரி வரைபமானது **அ.சா.ஆ.5** ஆகவும், அ.சா.1–ன் விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6** ஆக குறியீடு

செய்யப்பட்டும், அ.சா.1–ன் புதுக்கோட்டை மருத்துவமனை விபத்து பதிவேடு **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்பட்டும், அ.சா.1–ன் காயச்சான்றானது **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்பட்டும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையானது **அ.சா.ஆ.9** ஆகவும் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் **எ.சா.1** ஆக மனோகரன் என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார். சான்றாவணங்கள் இல்லை. சான்று பொருட்கள் இல்லை.

**<u>5) கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) இன் கீழான வினா மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சியம்:</u>**

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டவுடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றுகின்ற அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் **கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)** இன் கீழ் விளக்கி வினவியபோது, எதிரிகள் பொய் சாட்சி என்றும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உள்ளது என்றும் பதிலுரைத்ததால், எதிரிகள் தரப்பு சாட்சி எ.சா.1 ஆக மனோகரன் என்பவர் கடந்த 11.09.2024–ம் தேதி விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**<u>6) அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்களில் இருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சுரேஷ் ஆலங்குடி பஞ்சாத்தியில் வசித்து வந்து சென்னையில் டிரைவராக வசித்து வருவதாகவும், அவரது மாமியார் வீடு வடகாடு கிராமத்தில் உள்ளதாகவும், கடந்த 06.04.2017–ம் தேதி காலை 9 மணிக்கு வடகாட்டில் உள்ள தனது மாமியார் வீட்டிற்கு வந்திருந்தபோது, எதிரிகள் அ.சா.1–ன் மாமியாருக்கும் அவரது அம்மாவிற்கும் உள்ள கொடுக்கல் வாங்கல் பிரச்சனையை வைத்து, செந்தில்குமார் ஆபாசமான வார்த்தைகளால் திட்டி, கொலைமிரட்டல் விடுத்து வலது கையால் மூக்கில் குத்தியதில், மூக்கிலிருந்து இரத்தம் கொட்டியதாகவும் கம்பால், தன்னை அடித்ததாகவும், அதனால் தோள்பட்டை மற்றும் இரண்டு கால்களில் காயம் ஏற்பட்டதாகவும் எடுத்துரைத்துள்ளார். அதன் பின்பு சம்பவத்தை பார்த்த அ.சா.1–ன் மனைவி அ.சா.2 கௌசல்யா அ.சா.1 ஐ மருத்துவமனையில் சேர்த்ததாக கூறப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிக்கு ஆதரவாக இவ்வழக்கின் காயம்பட்ட சாட்சி அ.சா.1 ஆகவும், வழக்கு சம்பவத்தினை நேரடியாக

பார்த்ததாக அ.சா.2 கௌசல்யா என்பவர் விசாரணை செய்யப்பட்டும், அ.சா.1–ன் தாயார் அ.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டும், 4, 5 சாட்சிகள் சம்பவத்தினை பற்றி கேள்விப்பட்ட சாட்சியாகவும், அ.சா.6 ஆக முதல் தகவல் அறிக்கை மற்றும் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்த புலன் விசாரணை அதிகாரியும், எதிரிகளை கைது செய்து பிணையில் விடுவித்த சாட்சியாக அ.சா.7–ம் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். மேற்படி அ.சா.7–ன் மூலம் அ.சா.1–ன் விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ சிகிச்சை ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் எ.சா.1 ஆக மனோகரன் என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**7) அரசு தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு வாதம்:**

7.1) அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் நிலை II அவர்கள் தனது வாதத்தில், அரசு தரப்பு வழக்கு தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், காயம்பட்ட சாட்சியின் மருத்துவ சான்றிதழ் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு சம்பத்தினை நேரடியாக பார்த்ததாக அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர் என்றும், அ.சா.4 மற்றும் அ.சா.5 சாட்சிகள் பிறழ் சாட்சியாக மாறிவிட்டபடியால் அரசு தரப்பு வழக்கு பாதிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இவ்வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்துள்ளார் என்றும், எனவே எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

7.2) எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தனது வாதத்தில், அரசு தரப்பு வழக்கு பொய்யாக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கின் தரப்பினர்கள் அனைவரும் நெருங்கிய இரத்த உறவினர்கள் என்றும், 2 முதல் 4 எதிரிகள் உடன் பிறந்த சகோதரர்கள் என்றும், 3–ம் எதிரியின் மகன் தான் 1–ம் எதிரி என்றும், நிகழ்நிலை புகார்தாரரும், அ.சா.2–ம் கணவன் மனைவி என்றும், அ.சா.3 அ.சா.2–ன் தாயார் என்றும், அ.சா.1–க்கு அ.சா.2 ஐ திருமணம் செய்து வைத்ததே 2–ம் எதிரி தான் என்றும், 2–ம் எதிரியின் அக்கா மகளின் கணவர் என்றும், கொடுங்கல் வாங்கல் பிரச்சனை மனதில் வைத்துக்கொண்டு பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், எதிரிகளுக்கும் அ.சா.1 முதல் 3–ன் குடும்பத்திற்கும் எவ்வித முன் பகையோ

வன்மமோ கிடையாது என்றும், எதிரிகள் குற்ற பின்னனி இல்லாத நபர்கள் என்றும், 2–ம் எதிரி சண்டையை விலக்கிவிடதான் சென்றார் என்றும், அ.சா.1–க்கு 2–ம் எதிரி தான் திருமணம் செய்து வைத்தார் என்றும், அ.சா.1 இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க விருப்பம் இல்லாமல் நீண்ட நாட்களாக வெளிநாட்டில் இருந்து கொண்டு, வழக்கினை காலதாமதபடுத்தும் நோக்கில் இருந்து வந்தார்என்றும், அரசு தரப்பு சாட்சிகளை எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, நிறைய முரண்பாடுகள் இருந்தது என்றும், இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றும், வழக்கு சம்வத்தை அரசு தரப்பால் ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**8) இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 2 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 325 of IPC–ன் கீழும், 1, 3, 4 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 325 of IPC–ன் கீழுமான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.**

**9) சாட்சியங்களின் பரிசீலனை மற்றும் பகுப்பாய்வு:**

9.1) இருதரப்பு வாதங்களும் வழக்கின் சாட்சியங்களும், சான்றாவணங்களும் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

9.2) இவ்வழக்கின் 2 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 325 of IPC–ன் கீழும், 1, 3, 4 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 325 of IPC–ன் கீழும் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதே ஆகும். மேற்படி அரசு தரப்பு சாட்சிகளை பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது முதல் விசாரணையில், **எதிரிகள் அடித்ததாகவும், தனது நண்பரான சரவணனுக்கு போனில் தகவல் சொல்லி அவர் மருத்துவமனையில் சிகிச்சைக்கா கொண்டு சேர்த்தார்** என்று எடுத்துரைத்துள்ளார். மேலும் மனைவி மற்றும் மாமியார் சம்பவ சமயத்தில் இருந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் அ.சா.ஆ.1 புகாரில் கடைசியாக, **சம்பவத்தை பார்த்த எனது மனைவி கௌசல்யா என்னை அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தார்** என்று குறிப்பிட்டுள்ளார்.

சம்பவத்தின் போது அ.சா.3 ஆன மாமியார் இருந்ததாக குறிப்பிடவில்லை. மேற்படி அ.சா.1 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட சாட்சியத்தில், அ.சா.2 தனது மனைவி என்பதையும், அவரது திருமணம் தனியாக நடைப்பெற்றதையும், அவரது திருமணத்திற்கு மாமனாருக்கு தகவல் தெரிவிக்காதது குறித்தும், அவர் வராதது குறித்தும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். 2–ம் எதிரி செந்தில்குமார் எனது திருமணத்திற்கு தாய்மாமன் என்ற முறையில் வந்திருந்தார் என்று குறிப்பிட்டுள்ளது ஆகியவை மழுப்பலாக அ.சா.1 சாட்சியமளித்துள்ளது தெரிய வருகிறது.

9.3) அ.சா.2 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, 2**–ம் எதிரி மட்டும் திருமணத்திற்கு வந்ததையும், அ.சா.2–ன் அம்மாவான அ.சா.3–ன் அம்மாவுடன் அ.சா.2 பேசுவதில்லை என்றால் ஆமாம்** என்றும் சாட்சியமளித்துவிட்டு, **பணம் கொடுக்கல் வாங்கல் இல்லை** என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால் அ.சா.2 தனது பாட்டியிடம் பேச்சு வார்த்தை இல்லை என்பதை ஒப்புக்கொண்டு, எதற்காக பேச்சு வார்த்தை இல்லை என்பதற்கான விளக்கத்தை தனது குறுக்கு விசாரணையில் சொல்லவில்லை. அ.சா.3–ன் அம்மாவிற்கு வரவு செலவு பிரச்சனை இருந்து வருவதாக கூறப்படும் நிலையில், அவரைப் பற்றி அ.சா.1–ம் தனது புகாரில் குறிப்பிட்டு கூறியுள்ளார். ஆனால் அரசு தரப்பில் ஏன் அவரை சாட்சியாக விசாரிக்க ஏன் முன்வரவில்லை என்ற விளக்கதினை என்பதும், அ.சா.2 குறிப்பிட்டு எதிரிகள் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படாதது குறித்த வினாவும் கேட்கப்பட்டுள்ளது.

9.4) அ.சா.1 தனது முதல் விசாரணையிலும், அ.சா.2 மற்றும் 3 தனது முதல் விசாரணையிலும் அ.சா.2 திருமணம் ஆன நாள் முதல் அ.சா.3–ன் வீட்டில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் அ.சா.3 தனது முதல் விசாரணையில், அ.சா.1 சென்னையில் வேலைப்பார்த்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், **அ.சா.3 ஊரில் எனக்கும் என்னுடைய அம்மாவிற்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. எங்களுக்கு தெரியாமல் அந்த இடத்தினை என்னுடைய அண்ணன் மற்றும் தம்பி பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள்** என்று சாட்சியமளித்துள்ளார். மேலும்

**உஷாராணி, தனலெட்சுமி, மாரியம்மாள் மொத்தம் 7 பேர் வந்து வழக்கு சம்பவத்தில் ஈடுப்பட்டதாகவும், அப்போது வழக்கின் எதிரிகள் நான்குபேரும் சீமகருவேலை கட்டையை கொண்டு என்னுடைய மருமகன் அ.சா.1 ஐ தாக்கினார்கள் என்றும், தருண் என்பவரை முள்ளில் தூக்கி வீசியதால் அவருக்கு உடலில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது** என்றும் சாட்சியமளித்துள்ளார். ஆனால் அரசு தரப்பில் ஏன் உஷாராணி, தனலெட்சுமி, மாரியம்மாள் ஆகியோரை எதிரிகளாக சேர்க்கவில்லை என்பதும், தருண் என்ற குழந்தைக்கு காயம் ஏற்பட்டிருந்த கூறப்பட்டிருந்தும் அவருடைய காயச்சான்றிதழையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதற்கான விளக்கத்தை அளிக்கவில்லை.

9.5) அ.சா.3 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பாரா 2–ல், எதிரிகளுக்கும் அ.சா.1–ற்கும் உள்ள உறவு முறையும், அ.சா.3–ன் மகள் திருமணத்திற்கு 2–ம் எதிரி வந்துள்ளதையும், பிரச்சனை நடந்தபோது, தனது அம்மா மாரியம்மாள் செந்தில்குமார் வீட்டில் தான் இருந்தார் என்றால் ஆமாம் நான் அடிக்கடி மாரியம்மாளிடம் பணம் கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல என்று சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட சூழ்நிலையில் இருந்து 2–ம் எதிரியின் வீட்டில் அ.சா.3–ன் தாயார் இருந்துள்ளதையும், அவர்களுக்குள் சொத்து பிரச்சனையோ, பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனையோ இருந்து வருவது தெரிய வருகிறது. வழக்கு சம்பவம் 06.04.2017 காலை 9 மணிக்கு நடைப்பெற்றதாக குறிப்பிடப்பட்டிருந்தும், முதல் தகவல் அறிக்கை 10.04.2017–ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ள காலதாமத்தினை குறித்து அரசு தரப்பில் எவ்வித விளக்கத்தையும் அளிக்கவில்லை. அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் ஒருவருக்கொருவர் Interested Witness என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

9.6) அ.சா.4 பார்வை மகஜரில் கையொப்பம் செய்த சாட்சி ஆவார். அவருக்கு சம்பவத்தை பற்றி தெரியாது. அ.சா.5–ம் அ.சா.4 ஐ போன்றே சம்பவத்தை பற்றி தெரியாத பார்வை மகஜரில் கையொப்பம் செய்த சாட்சி ஆவார். இவ்வழக்கு சம்பவம் நடைப்பெற்றதாக கூறப்படும் இடத்திற்கு அருகாமையில், நிறைய வீடுகள் இருந்தும் யாரையும் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்பது குறித்து எதிரிகள் தரப்பு

குறுக்கு விசாரணையில் கேள்விகள் எழுப்பபட்டும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அதுசம்பந்தமாக அ.சா.6 புலன் விசாரணை அதிகாரியை எதிரிகள் தரப்பில் குறிப்பிட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சூழ்நிலையில் அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் வேண்டப்பட்ட மற்றும் Interested Witness என்பதாலும், வழக்கு சம்பவத்தில் மூன்றாம் நபர்களை சாட்சிகளாக விசாரிக்க வாய்ப்புகள் இருந்தும், அரசு தரப்பில் சாட்சிகளை விசாரிக்க தவறிவிட்டபடியாலும், முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக பதியப்பட்டதற்கான விளக்கத்தை அரசு தரப்பில் எடுத்துரைக்கப்படாததாலும், அ.சா.3–ன் தாயார் 2–ம் எதிரியின் வீட்டில் இருந்து வருவதும், அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில், எதிரிகள் குடும்பத்திற்கும், அவரது குடும்பத்திற்கும் இடப்பிரச்சனை இருந்து வருவதையும், எதிரிகள் தரப்பில் எடுத்துரைக்கப்படுவதைபோல் அ.சா.3–ன் தயாருக்கும் அ.சா.1 முதல் 3 சாட்சிகளுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இருந்து வருவதையும், இவ்வழக்கில் அ.சா.1 முதல் 3 சாட்சிகளை தவிர மற்ற மூன்றாம் நபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததாலும், நேரடி சாட்சிகள் யாரும் இல்லாததும், அ.சா.1 மற்றும் 3–ன் சாட்சியத்திற்கு முரண்பட்டு உள்ளதாலும், ஏன் காயம்பட்ட சாட்சியான தருணின் காயச்சான்றிதழ் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், அ.சா.3 கூடுதலாக 3 எதிரிகளை பற்றி குறிப்பிட்டிருந்தும் அவர்களை அரசு தரப்பில் எதிரிகளாக சேர்க்காததும், வழக்கு சொத்துகள் ஏதும் கைப்பற்றப்படாததும், அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் நெருங்கிய இரத்த உறவினர்களாக உள்ளது போன்றவற்றாலும், அரசு தரப்பில் அ.சா.1–க்கு ஏற்பட்டதாக கூறப்படும் காயமானது எதிரிகள் செய்த செய்கையால் தான் ஏற்பட்டது என்று நிருபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து,

**இறுதியாக** 2 வது எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 325 of IPC–ன் கீழும், 1, 3, 4 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 325 of IPC–ன் கீழுமான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் சரிவர நிரூபணம்

செய்யப்படவில்லை என்று முடிவு செய்து எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

அ) வழக்கு சொத்து ஏதும் இல்லை என்பதால் வழக்கு சொத்து குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

ஆ) இந்த வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதி கொடுக்கப்பட்ட பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**சாட்சி மற்றும் சான்றாவணப்பட்டியல் :**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

**அ.சா.1** : சுரேஷ்

**அ.சா.2** : கௌசல்யா

**அ.சா.3** : தமிழரசி

**அ.சா.4** : நாராயணன்

**அ.சா.5** : ராமசாமி

**அ.சா.6** : வேலுசாமி

**அ.சா.7** : குணசேகரன்

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

**அ.சா.ஆ.1** : புகார்

**அ.சா.ஆ.2** : பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையொப்பம்

**அ.சா.ஆ.3** : முதல் தகவல் அறிக்கை

**அ.சா.ஆ.4** : பார்வை மகஜர்

**அ.சா.ஆ.5** : மாதிரி வரைபடம்

**அ.சா.ஆ.6** : அ.சா.1–ன் மருத்துவ பதிவேடு

**அ.சா.ஆ.7** : அ.சா.1–ன் புதுக்கோட்டை மருத்துவமனை விபத்து பதிவேடு

**அ.சா.ஆ.8** : அ.சா.1–ன் காயச்சான்று

**அ.சா.ஆ.9** : சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**சான்று பொருள் :** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சி:**

**எ.சா.1** : மனோகரன்

**பின்குறிப்பு :**

1. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் எதிரி விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**//உண்மை நகல்//**

SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.11 04:55:58 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**